தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 212

தருமநெறி நீதிகள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 212

தருமநெறி நீதிகள்

பதிப்பாசிரியர் :

புலவர். **வீ. சொக்கலிங்கம்,**

தமிழ்ப் பண்டிதர், (ஓய்வு)

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

2005] [விலை : ரூ. 20-00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	தருமநெறி நீதிகள்
பதிப்பாசிரியர்	:	புலவர். வீ. சொக்கலிங்கம்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
வெளியீட்டு எண்.	:	212
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	மூன்றாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	செப்டம்பர், 2005
தாள்	:	TNPL 18.6 கி. கி
நூல் அளவு	:	21 x 14 செ. மீ.
பக்கங்கள்	:	56
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம்.
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	நீதி நூல்
விலை	:	ரூ. 20-00

வெளியீட்டாளர் முகவுரை

மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற

என்பார் திருவள்ளுவர். மக்கள் செய்யத்தக்கன இன்ன; தள்ளத்தக்கன இன்ன என்பதனை வலியுறுத்த வந்த செந்நாப்போதார் 'மனத்துக்கண் மாசு இலனாக இருத்தல் வேண்டும்' என்கின்றார். அவ்வாறு ஒழுக, பல நீதிநூல்களைப் பல சான்றோர்கள், தனது அறிவின் முதிர்ச்சியாலும், அனுபவ ஞானத்தாலும் அறிந்து, எழுதி, நூலாக்கித் தந்தனர்.

இன்ன குற்றம் புரிந்தவனுக்கு இன்ன தண்டனை, என்று நீதிமன்றம் கூறுவதுபோல, மனிதன் இப்படித்தான் நடக்கவேண்டும்; தவறினால், இன்னின்ன துன்பங்கள் நேரிடும் என்று, தவறு செய்வதற்கு முன்னமே எச்சரித்து, நம்மை வழிப்படுத்துவனவே நீதி நூல்கள். அவற்றுள் ஒன்றே, இத்தருமநெறி நீதிகள் எனும் நூல்.

அவ்வகையில் சரசுவதி மகால் நூலகம், 1965ஆம் ஆண்டில் முதற்பதிப்பும், 1995ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பாகவும் பதிப்பித்து வெளியிடப்பெற்ற தருமநெறி நீதிகள் என்னும் இந்த நீதிநூல் இப்பொழுது மூன்றாம் பதிப்பாக வெளி வருகின்றது.

பலவகை நீதிகளை எளிய இனிய நடையில் விருத்தப் பாக்களில் புகலுகின்ற இந்நீதி நூல் இந்நூலக முன்னாள் தமிழ்ப்பண்டிதர் புலவர் திரு. வீ. சொக்கலிங்கம் அவர்களால் பதிப்பிக்கப்பெற்றதாகும். பதிப்பாசிரியரின் பதிப்பு முன்னுரை இந்நூலின் இயல்புகளை இனிது விளக்குகின்றது.

இந்நூலைப் பதிப்பித்த பதிப்பாசிரியரையும், சிறப்புற அச்சிடுவதற்குக் காரணமாகத் திகழ்ந்த நிருவாக அலுவலர் திரு. இரா. சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் டாக்டர்.குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோர்க்கும், பதிப்புத்துறைப் பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மா. வீரசண்முகமணி, இ.ப.ஆ.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
02- 9 - 2005.

முன்னுரை

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். -என்பது குறள்.

மனிதன் மனிதனாக வாழவேண்டுமானால், அவன் ஒழுக்கமுடையவனாக இருத்தல் வேண்டும். எல்லார்க்கும் நன்றாம் பணிதல். அதாவது, எல்லோரிடத்திலும் இனியவனாய் ஒழுகுதலே ஒழுக்கமுடைமையாகும். ஒழுகு-அம்-ஒழுக்கம். நினைவாலும், சொல்லாலும் செயலாலும் மக்கட்கும் மற்றை உயிரினங்கட்கும் தீது புரியாது நன்மை புரிதலே நல்லொழுக்கம் எனப்படும்.

நல்லொழுக்கம் என்பது, மனிதன் வாழவேண்டிய நெறி அல்லது கட்டுப்பாடு எனல் பொருந்தும். யாவரேயாயினும், தத்தமக்கு விதித்த நெறிகளின்படி, நீதிகளின்படி நடத்தல் வேண்டும். நெறி(வழி) தவறினால் இடர் ஏற்படும். புகைவண்டி, சம அகலமுள்ள இருப்புப்பாதையில் சென்றால்தான் ஒழுங்காகச் செல்லும். மாறுபட்டால் தடம்புரண்டு, துன்பத்தை விளைவிக்கும். இருகரைகட்குட்பட்ட ஆறு, மக்கட்கும், வேளாண்மைக்கும் உதவுகின்றன. கரையற்றது காட்டாறு: தீய பலனைத்தரும்.

எனவே, மனிதன் எவ்வெவ்வாறெல்லாம் வாழ வேண்டும்: நல்லொழுக்கமுடையவனாகத் திகழவேண்டும் என்பதற்காகவே, நம் முன்னோர்கள், சான்றோர்கள் தமது அனுபவத்தின் வாயிலாகப் பல நீதிகளை வழங்கிப் போந்தனர். குற்றம் புரிந்தவனுக்குத் தண்டனை வழங்க நீதிமன்றங்கள் இருக்கின்றன. நீதியின் அடிப்படையில் அவை செயலாற்றுகின்றன. 'நீதி' என்ற சொல்லுக்கு நியாயம், முறைமை, மெய் முதலான பொருள்கள் உள்ளன.

நீதிகளெல்லாம் அறவழி ஒழுகப்படுவன. அறத்தொடு நிற்றல் மூலான நெறிகளையெல்லாம் தமிழிலக்கியங்கள் வற்புறுத்துகின்றன. 'அறம்'என்பது யாது? அதன் சிறப்பியல்புகளென்னென்ன? எத்தனை வகையான அறங்கள் உள்ளன என்றெல்லாம், வள்ளுவர் முதலான சான்றோர்கள் நமக்கு வலியுறுத்தியுள்ளனர். இவ் வறத்தினையே, வடு அல்லாத மொழி எனப்படும் வடமொழி[1] யாளர்கள் 'தருமம்' என்றனர்.

'அறஞ்செய விரும்பு' என்பார் ஔவையார், தமது ஆத்திச்சூடியில் அதனை முதலாகக்கொண்டு இரண்டிரண்டு சொற்களாலேயே, மனிதன் வாழ்வாங்கு வாழ நெறி வகுத்துப் போந்தார். இதுபோன்று, பல நீதிகளை வலியுறுத்துகின்ற நூல்கள் நீதி நூல்கள், தமிழிலக்கியங்கள் பலவற்றிலும் ஆங்காங்கே, அறநெறியொழுகினார் சிறப்புற்றதையும், பிறநெறியொழுகினார் அழிந்ததையும் காண்கிறோம்.

நீதிநூல்கள் எனுங்கால், ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், நாலடியார், திரிகடுகம், ஏலாதி முதலான பலவற்றை நமக்கு நம் முன்னோர்கள் அருளிப்போந்தனர். வடமொழியிலும், நீதி சந்திரிகா, பர்த்துருஹரியின் நீதிசதகம் முதலான நூல்கள் தருமத்தை வலியுறுத்துகின்றன.

இந்நூல், தருமநெறிப்படி, அதாவது அறவழி ஒழுக வேண்டிய நீதிகளைப் போதிக்கிறது. நல்ல அறநெறிகளை விளக்குகின்றது. இது இன்னா நாற்பது, இனியவை நாற்பது போன்ற சாயலையுடையது.

இந்நூலின் இரண்டாம் பாடலில் வினை, வினைப் பயன் முதலான சைவ சித்தாந்தக் கூறுகள் காணக் கிடைக்கின்றன. ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டுதற்குச்

---

1. வடு அல்மொழி - வடல்மொழி (வழக்கில்) வடமொழி எனப்பட்டது.

சிலப்பதிகாரம் சான்று பகர்வதுபோல், எமது மகால் வெளியீடான "பார்சுவநாதர் அம்மானை", வினையையும் வினைப்பயனையும் வலியுறுத்திக் கூறும் ஜைன நூல், இராமதாசர், கிளி வளர்த்தார் என்பதற்காகச் சிறைதண்டனை பெற்றார் என்பதனை அறிவோம்.

உலகநீதி, உண்ண நீதி, உணவு சமைக்க முறை நடக்கை விதி, நீராடவிதி, உறங்கமுறை முதலான பலவற்றை நம்மவர் வகுத்துள்ளனர். "மக்கள் நூறாண்டு வாழ்வதெப்படி?" போன்ற நூல்களும், மனித வாழ்வுக்கு உகந்தன. சூரியன் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைவது நியதி. பருவ காலங்களில் நிகழவேண்டியவை நிகழ்தல் நியதி. மாறுபாட்டால் ஏற்படும் விளைவுகளை, அதாவது மழை பெய்யாது கெடுத்தது: கோடையில் மழை கொட்டியது, போன்றவற்றை அண்மையில் அனுபவித்தோம்: அவதியுற்றோம், வள்ளுவரும்:

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்
றாங்கேஎடுப்பதூஉம் எல்லாம் மழை. என்றார்.

திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க அடிகள் செய்யக்கூடாத செயல்களையெல்லாம் ஒரு பட்டியலாக்கித் தன்மேலேற்றி, "மனுமுறை கண்ட வாசகம்" எனப்பெயரிட்டுத் தந்துள்ளார்.

இந்நூலுள் 3-ம் பாடல், பட்டினத்தாரின், "அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே.....பற்றித் தொடருவது இருவினைப் புண்ணிய பாவமே" என்ற பாடலை நினைவு படுத்துகின்றது. 4-ஆம் பாடல் 'அன்னதானமே சிறந்தது' என்பதனை வலியுறுத்தும், மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! என்ற மணிமேகலையினை நினைவு படுத்துகிறது. 5-ம் பாடல், 'பாபஞ் செய்யாதிருமனமே - நாளை கோபம் செய்தே எமன் கொண்டோடிப் போவான்' என்ற கடுவெளிச் சித்தர் பாடலை நினைவூட்டுகிறது.

பிறர் செய்த தருமங்களை, நாம் காத்தல் வேண்டும் என்ற கருத்தினைக் கூறுங்கால், தென்காசியில் பராக்கிரம பாண்டியன், விசுவநாதருக்குச் சிவாலயம் எடுப்பித்துக் கட்டளைக் கலித்துறைப் பாடல்களாகக் கல்லில் வெட்டி வைத்து, இத்தருமத்தைக் .காக்கவேண்டும் என்பதை 'ஆராகிலுமிந்த .... பாராரறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே' என்று கூறுகின்றார். மன்னன், 'தருமத்தைக் காப்போரது திருவடிகளைப் பணிகின்றேன்' என்கின்றார். இதனை நினைவுப்படுத்துகின்றது 6-ஆம் பாடல்.

ஏழாம் பாடல், 'தக்கார் தகவில ரென்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்' என்பதனை எடுத்துரைக்கின்றது. 8-ஆம் பாடல், மழைக்கு ஆதாரமான, மரம் வளர்த்தலை நினைவுபடுத்துகின்றது. இதில் வீட்டில் இருக்கவேண்டிய மரங்கள் என்னென்ன என்பதனை எடுத்துக் கூறுகின்றார்.

வீட்டில் இருக்கக்கூடாத மரங்களும் உள்ளன. அவையாவன:

வெண்பா

பருத்தி யிலுப்பை பனையெட்டி நாவல்
எருக்குப் புளிமாவோ டெட்டும் - பெருக்கமுடன்
இல்லிருந் தக்கால மிந்திரனே யானாலும்
செல்லப்போய் நிற்பாள் திரு.

பருத்தி, இலுப்பை, பனை, எட்டி, நாவல், எருக்கு, புளி, மா இந்த எட்டு மரங்களும் வீட்டில் இருந்தால் அவன் இந்திரனேயானாலும், இலக்குமி விலகிப்போவாள் என்றவாறு என்று சில்ப சாத்திரம் கூறுகின்றது.

மேலும், எமது மகால் 162-ம் எண்ணுள்ள மருத்துவச் சுவடியில், "வாழும் மனையில் இந்த மரங்கள் வைக்கக் கூடாது" என்ற தலைப்பில் காணப்படுவதாவது:

"பருத்தி அகத்தி பனைநெல்லி நாவல்
எருக்கு முருக்கிலவோ டெட்டும்-பெருக்கவே
எந்தபதி யானாலும் இந்திரபதி யானாலும்
அந்தமனை பாழாய் விடும்" என்பதாம்.

9-ம் பாடல்

நன்றிதரும் பிள்ளைஒன்று பெற்றாலும்
குலமுழுதும் நன்மை யுண்டாம்
அன்றிஅறி வில்லாத பிள்ளைஒரு
நூறுபெற்றும் ஆவ துண்டோ
மன்றில்நடம் புரிவாரேதண்டலையாரே
சொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல ஈன்றும்என்ன குஞ்சரம்ஒன்று
ஈன்றதனால் பலனுண்டாமே.

என்ற பாடலை, நினைவூட்டுகின்றது. 10-ம் பாடல் இன்னின்னதால் இன்னின்னது விளங்கும் என்பதனை விளக்குகிறது. இதனை,

தானேன பாணி நது கங்கனேன
ஸ்நானேன சுத்தி நது சந்தனேன!
மானேன த்ருப்தி நது போஜனேன
ஞானேன முத்தி நது முண்டனேன!!

என்று நீதி சந்திரிகா கூறுகின்றது. அதாவது: கை விளங்குவது கங்கணத்தாலல்ல; தான தருமங்களினால். உடற்றூய்மை நீரானேயன்றி சந்தனத்தாலல்ல. மனநிறைவென்பது உணவினாலல்ல, மானத்தினால். வீடுபேறடைவ தென்பது பேரறிவினானேயன்றித் தலை மொட்டையடித்துக் கொள்வதாலல்ல என்பதாம்.

பதினொன்றாவது பாடல்:

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்-கூடுவிட்டு இங்கு
ஆவிதான் போயினபின் யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்"--

என்பதனை நினைவூட்டிச் செல்வத்து பயனே ஈதல் என்ற குறட் கருத்தினையும் வலியுறுத்துகின்றது.

பனிரெண்டாம் பாடல்: "மதலையைப் பெறுநாள் துன்பம். வளர்த்திடு நாளுந் துன்பம் விதலைநோய் அடையில் துன்பம்" எனத்தொடங்கும் பாடலுக்குச் சான்று பகர்கின்றது.

பதின்மூன்றாம் பாடல்: 'துன்பம் வருங்கால் நகுக' என்பதனை வலியுறுத்துகின்றது. பதினான்காம் பாடல்: 'பெரியோர்கள், விண்ணுலகம் பெறுவதாயிருந்தாலும் தீய காரியங்களைச் செய்யமாட்டார்கள்,' என்கிறது. பதினைந்தாம் பாடல்: 'அற்பனுக்கு வாழ்வு வந்தால் பாதிராத்திரியில் குடை பிடிப்பான்' என்பதனையும். 'ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல் குரங்கின் கைகொள்ளி கொடுத்து விடல்' என்ற பழமொழிப் பாடலையும், 'பித்துப் பிடித்தமனக் குரங்கு வெறி பேயும் பிடித்துக்கொண்டாட்ட மிட்டால்' என்ற தொடரையும், 'மனமெனுமோர் பேய்க்குரங்கு' என்பதனையும், 'நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால், கிடைக்கு இரண்டு ஆடு கேட்கும்' என்பதைனையும் நினைவூட்டுகின்றது.

16-ம் பாடல்; அற்பனுக்கு உபகாரம் பண்ணினால் ஆபத்து விளையும் என்பதனையும்,

'வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக்கு உரைத்திடில் இடாது ஆகுமே.'

என்பதனையும் ஞாபகப்படுத்துகின்றது.

17-ம் பாடல், தரிசனைப்பலனையும், 18-ம் பாடல், 'மூடர் முன்னே பாடல் மொழிந்தால்' எனத்தொடங்கி, 'ஆடகப் பொன் செந்திருவைப் போல் அணங்கைச் சிங்காரித்து என்ன பயன்; அந்தகனே நாயகனானால்' என்றதனையும் சிந்திக்க வைக்கின்றது. 19-ம் பாடல்

வித்துவானாயிருந்தாலும் தீயவன் புறக்கணிக்கப்படுவான், என்பதனைச் சிந்திக்கவைக்கின்றது. 20-ம் பாடல் பாம்பின் கால் பாம்பறியும் என்பதனைக் காட்டுகின்றது.

21, 22-ம் பாடல்களும் உள்ளன. 23-ம் பாடல், 'பாத்திரமறிந்து பிச்சையிடல் வேண்டும்' என்பதனையும், 24-ம் பாடல், 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை' என்பதனையும் 25-ம் பாடல், 'பெரியோர் எதிர் உதவியை விரும்பார்' என்பதனையும், 26-ம் பாடல்,' பற்றித் தொடருவது இருவினைப் புண்ணிய பாவமுமே' என்பதனையும், 27-ம் பாடல்,தரித்திரத்தின் செயலையும், 28-ம் பாடல், ஈயாதான் இயல்பையும், 29-ம் பாடல், தாயோடு அறுசுவை போம் எனத்தொடங்கும் பாடலையும், 30-ம் பாடல், பெண்புத்தி கேட்கலாகாது என்பதனையும், 31-ம் பாடல் சுமையின் இயல்பையும், 32-ம் பாடல், நட்டம் அடைவார் யார் யார் என்பதனையும், 33-ம் பாடல், தனக்குத் தானே கெடுதல் செய்யும் காரியங்களையும் விளக்குகின்றன.

60-ம் பாடல், கொம்புள்ள விலங்குகட்கு, ஐந்து முழம் தள்ளியும், குதிரைக்கு பத்து முழம் தள்ளியும் யானைக்கு ஆயிரம் முழம் தள்ளியும் இருத்தல் வேண்டும். ஆனால் தீயோர் கண்ணில் படாத தூரத்து விலகியிருத்தல் வேண்டும். என்பதனையும், தீயாரைக் காண்பதுவும் தீது, என்பதனையும் எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறே பிற பாடல்களும், பல செய்திகளையும் நீதிகளையும் நினைவூட்டி வலியுறுத்துகின்றன. இந்நூல் 'பழமொழி' நூல்போல் காணப்படுகிறது. வடமொழிச் சொற்கள் மிகுதியும், பேச்சு வழக்குத் தமிழும், அதிக பிழைகளும் உள்ளன. சில செய்யுட்களில் வினை முடிவு சரியில்லை.

நூலாசிரியர் பெயர் முதலியன தெரியவில்லை யாயினும் இவர் ஓர் அந்தணராக இருக்கலாம் என்பது தெரிகிறது. இந்நூல், எமது மகால் தமிழ்ச்சுவடி எண்.1405-ஐக்

கொண்டது. இச்சுவடியினை, எமது நூலகக் கெமிக்கல் கன்சர்வேட்டர் திரு. P.பெருமாள்,M.A.,B.Lib.Sc.,அவர்கள் மூலம், எமது மகாலுக்கு அன்பளிப்பாக உதவியவர், திருச்சி, கோட்டத்தூர் வழி முத்தியம்பாளையம் திருவாளர் P.நல்லுசாமி அவர்கள் ஆவர், அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இச்சுவடியினை ஆய்ந்து வெளியிட அனுமதியளித்த எமது மகால் நூலக முன்னாள் இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான திருமதி R. சத்பதி, இ.ஆ.ப., அவர்கட்கும், தற்போதைய இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமான திருமிகு து. இரா. இராமசாமி, இ.ஆ.ப., அவர்கட்கும், எமது நூலக நிருவாக அலுவலர் பொறுப்பு, திருவாளர் அ. பஞ்சநாதன்,M.A.,B.Lib.Sc., அவர்கட்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்டுத்தந்த தஞ்சை, திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும் எனது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்நூல் வெளிவரப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கு எனது மேலான நன்றியினைக் கூறிக்கொள்கிறேன்.

எல்லாவற்றிற்கும் மேலாகத் தோன்றாத் துணையாக நின்று இயக்குவித்த இறைவனுக்கும் எமது நன்றியினைக் கொள்கிறேன்.

இந்நூலைப் பெற்றுப் பயனடைவோர், இதிலுள்ள குற்றம் களைந்து குணங்கொள்வார் என நம்புகிறேன். இதுபோன்ற சுவடிகளைத் தம்வசம் கொண்ட பேரருளாளர்கள், அவற்றை எம்மிடம் தருவதன் மூலம், தான் புகழடைவதோடு, உலகுக்கும் உதவியவர்களாவார்களாக.

இங்ஙனம்

தஞ்சாவூர்,
1-8-1985.

புலவர் ***வீ. சொக்கலிங்கம்,***
தமிழ்த்துறைத் தலைவர்,
சரசுவதி மகால் நூலகம்.

தருமநெறி நீதிகள்

காப்பு

பருதி மதியிலகும் பார்மிசையோர்க் கெல்லாம்
தருமநெறி நீதிதன்னைச் சாற்றக்-கருதியிடும்
துங்கவெழுத் தைந்துகரச் சுந்திரம்பொற் செஞ்சடையிற்
கங்கைசுதன் தந்திமுகன் காப்பு.

சிவமயம்

நூல்

சீர்பெறுந் தருமச் செய்கை
        தெரிந்தவன் வழியே சென்று
பார்பெறப் பத்தி பண்ணித்
        தனக்கது பலித்தி டாதே
ஏர்பெறு கரும மெல்லாம்
        யாவர்க்கு மாகா தென்று
தேர்வுற விடுத்த ரத்தே[1]
        யெல்லையிற் செய்வர் தாமே!   (1)

என்பது தன்மமானவை எல்லாம் கேட்கக் கடவனுமாயக் கேட்ட பொருளைப் புத்திபண்ண வல்லனுமாய்த் தனக்காகாத காரியம் பிறருக்கு மாகாதென்று, கடுக தன்மங்களைப் பண்ணிக்கொள்வான். அதென்போலவெனில், மிததுருவானவன் தன்னைவிட்டுப் போகாமல் எப்போதும், சயிசன்னியவனாய்[2] இருப்பானென்றவாறு.

---

1. ரன்றே ? 2. அன்னியோன்னியமாக -நீங்கா நட்பாக

நன்றுடன் தீதா னாலும்
அவரவர் நயந்து தன்னால்
பண்ணிய பாவ நன்மை
பலித்தவ ரனுப விப்பார்
சென்றிடு நூறு கற்பஞ்
செல்லினுந் தவிர்ந்தி டாது
அன்றுசெ யனுபோ கங்க
ளனுபவித் திடவும் வேண்டும். (2)

என்பது. நன்றே யாகிலுந் தீதேயாகிலுந் தன்னால் பண்ணப்பட்ட புண்ணிய பாவமிரண்டுந்தானே யனுபவிக்க வேணும். ஆதலால், நூறுகோடி கற்பஞ் சென்றாலும் அனுபோகமானது தவிரா தென்றவாறு.

சீருடன் வருந்தித் தேடுந்
திரவியம் பதியுஞ் செல்லா
தூருட னுறவுங் காடு
மட்டினி லுடன்போய் மீள்வார்
பாரினில் வாழும் நாளில்
பண்ணிய பாவ நன்மை
கூருடன் போந்தா[1] மென்று
கூறின னவனி யோங்கே. (3)

என்பது, தான் தேடின திரவியமும், வருந்தியெடுத்த கிரகமுங் கூடப் போகாது. மித்துரு[2] பாந்தவ[3] ருற்றார் உறமுறையாகும் மயானத்தளவுங் கூடப்போய் மீள்வார்கள். அப்பால், தான் செய்த புண்ணிய பாவமிரண்டுங் கூடப் போமென்றவாறு.

கரிபரி யாயி ரங்கள்
கனத்தகோ தானம் பூமி
பரிவொடு ரசிதஞ்[4] சொர்ன[5]
பாத்திரம் பண்பா மென்றும்

1.பெரந்தா என்றுள்ளது. 2. நண்பர்கள் 3. பந்துக்கள் (உறவினர்) 4. வெள்ளி 5. தங்கம்.

குரிகுல[1] மொத்த கன்னி
கோடிதா னீந்திட்ட டாலும்
அரிது வென்றே யன்ன
தானமே யதிக மாகும். (4)

என்பது, ஆயிரம் யானையும், ஆயிரம் குதிரையும், ஆயிரம் பசுக்களும், அநேகம் பூமிகளும், வெள்ளிப் பாத்திரமும், சொர்ன பாத்திரமும், உபயகுல சுத்தமான கன்னிகளிலே, கோடி கன்னிகாதான மீந்திட்டாலும் அன்னதானத்துக்குச் சமானமில்லை என்றவாறு.

செல்வமுஞ் சடமுந் தானும்
திர[2]மென்று மறலி யென்றும்
அல்லலே செய்வா னென்றும்
அடுத்தவ னிருக்கு மென்றும்
சொல்லலாஞ் செய்கை யாலே
துலங்கிய மறலி தன்னை
வெல்லவே யறங்கள் செய்து
வீடுறு[3] வார்கள் தாமே! (5)

என்பது, சரீரமும் அயிச்சுவரியமும் நிலையல்ல, மித்துருவானவன் சன்னிதனா[4]யிருப்பான். அவனை வெல்லத்தக்கதாக, கடுக தன்மங்களைச செய்வானென்றவாறு.

சுயமாய்ச்செய் தருமஞ் தன்னில்
தோற்றிடு மிரும டங்கும்
அயலார்செய் தருமங் காத்தா
லன்றியே அந்த ரத்தை
நயமாய்ச்சென் றபக ரித்து
நத்தியே தானு மொன்றை
வியனாய்ச்செய் தரும மெல்லாம்
நிஷ்பலம்[5] விளம்புங் காலே! (6)

---

1. ? 2. ஸ்திரம். 3. வீடுரவாற்கள் என்றுள்ளது. 4.உடனாக அல்லது எதிராக. 5 பலனற்றது: வீணானது.

என்பது, தான் நூதனமாய்ச் செய்கிற தருமத்திலும் பிறத்தியார் பண்ணின தருமத்தைப் பரிபாலனம் பண்ணினா னாகில் அதிலும் இரட்டிப்பான பலனுண்டு. அந்தத் தருமத்தை அபகரித்து, வேறேயொரு தருமம் செய்தால் அது நிஷ்பலமா மென்றவாறு.

கங்குலில் மதிவி ளங்கும்
கதித்திடும் பகற்கா லத்தில்
செங்கதிர் விளங்கு மன்றிச்
சிறந்திடு மூலக மூன்றும்
பொங்கிய தருமத் தாலே
பிறந்தது[1] விளங்கு மென்றும்
வங்கிஷம்[2] விளங்கும் நல்ல
மகவினால் தானு மென்றே. (7)

என்பது, இராத்திரி காலமானது சந்திரனாலே விளங்கும். பகற் காலமானது சூரியனாலே விளங்கும். சுவர்க்க மத்திய பாதாள மூன்று லோகமும், தான தன்மத்தினாலே விளங்கும். வங்கிஷமானது சற்புத்திரனாலே விளங்குமென்றவாறு.

ஓரர சாலு வேம்பு
ஒருபத்துப் புளியு மூன்றும்
சீர்பெறு விளாவும் வில்வம்
மூன்றுடன் சிறந்த நெல்லி
பேர்பெறு மைந்து தேங்கும்[3]
பெருகுமா வைந்து பேணி
ஆரெனுஞ் செய்தா னாகி
லவர்க்கில்லை நரகந் தானே. (8)

என்றது, ஒரு அரசும், ஒரு ஆலும், ஒரு வேம்பும் பத்துப் புளியும், மூன்று விளாவும், மூன்று வில்வமும் ஐந்து நெல்லி மரமும், ஐந்து மாமரமும், ஐந்து தேங்கும் எவராகிலும் வைத்துப் பயிர் செய்தார்களேயாகில், அவர்களுக்கு ஒருக்காலும் நரகமில்லை என்றவாறு.

---

1. பொறந்தது என்றுளது. 2. வமிசம்: வழித்தோன்றல்.
3. தெங்கும் எனல் பொருந்தும்.

குலத்தையுந் தரிக்க நல்ல
குணமக வொன்று போதும்
நலத்தையிங் கிதத்தைச் சற்றும்
நண்ணிடாச் சேய்கள் நூறும்
பலத்துட[1] னிருக்கி லென்ன
பேய்க்கிடு வனேக வானில்
தலத்தினி லிருந்து மென்றும்
விளங்குதல் மதிதா னொன்றே ! (9)

என்பது, குலத்துக்கு நல்ல குணமான பிள்ளை ஒருவனே போதும். குணமீனமான பிள்ளைகளிலே நூறு பிள்ளைகளிருந் தாலும் பிரயோசனமில்லை. அதன்போலவெனில், ஆகாசத்திலே அநேக நட்சத்திரங்களிருந் தாலும், சந்திரனொருவன் இல்லா விட்டால் விளங்கதென்றவாறு.

மதகரி மதத்தி னாலும்
வாசிவே கத்தி னாலும்
பதியதன்[2] வதுவை யாலும்
பாவைதன் குணத்தி னாலும்
மதிகரன் திங்க ளாலும்
அரசன்றன் நீதி யாலும்
விதரணன் கீர்த்தி யாலும்
விளங்குவா ரிவர்கள் தாமே ! (10)

என்றது, ஆனையானது, தன்மதத்தினாலே விளங்கும். குதிரையானது, தன் வேகத்தினாலே விளங்கும். கிரகமானது[3], நித்திய சோபனங்களினாலே[4] விளங்கும். ஸ்ரீயானவள்[5], தனது குணத்தினாலே விளங்குவாள். இராத்திரி காலமானது,

---

1. பிலத்துட என்றுளது. 2. பதித்தன் என்றுளது. 3. வீடானது. 4.மங்கல விழாக்களினாலே. 5. ஸ்திரீ-பெண்

சந்திரனாலே விளங்கும். இராசாவானவன், தன் நீதியினாலே விளங்குவான், விதரணனானவன், தன் கீர்த்தியினாலே விளங்குவானென்றவாறு.

ஆடவர் தன்னில் தியாகி
யாரெனி லாதந்[1] தேடி
மாடுறப் புதைத்துண் ணாமல்
வழங்குத லின்றி வைத்து
வீடியே போவான் தியாகி
விளங்குத லுயிர்க்கு முத்தி
தேடியே யீந்து மூன்றும்
செல்பவன் தியாகி யென்றே[2] (11)

என்பது, லோகத்திலே தியாகி யாரோவென்னில் அர்த்தத்தைத்[3] தேடித் தானுண்ணாமலும், வழங்காமலும் புதைத்து வைத்தவன் தியாகியல்ல. அதை வழங்கியும் தான் பொசித்தும், பரலோகத்திற்கு வழிதேடினவன் தியாகி யென்றவாறு.

தனத்தினைத் தேடத் துக்கம்
தானதைப் புதைத்து வைத்து
மனத்துடன் காக்கத் துக்கம்
வழங்கிய போதுந் துக்கம்
இனத்துடன் புசிக்கத் துக்கம்
எண்ணிய பொருளி னாலே
அனைத்தினுந்[4] துக்கந் தானெ
யிருப்பிட மாகு மென்றே! (12)

என்றது, அர்த்தத்தைத்[5] தேடுகையிலுந் துக்கம், அர்த்தத்தை ரெட்சிக்கயிலுந் துக்கம். அர்த்தத்தைச் சிலவழிக்கையிலுந் துக்கம். அர்த்தத்தைப் பொசிக்கையிலுந் துக்கம். ஆதலால், அர்த்தமானது என்னேரமுந் துக்கத்துக் கிருப்பிடமென்றவாறு.

---

1. இரசம் பொன்: பொருள். 2. பாடல் சரியில்லை. 3 - 5 பொருளைத்
4. அனத்தினுந் என்றுளது.

வைத்திடுந் தனத்தால் சேதம்
வழங்கிய உயிர்க்குச் சேதம்
முத்திடும்[1] வியாகுலங்கள்
யாவர்க்கு முளதே யேனும்
புத்திமான் தனக்குத் தானே
மனதிலே தேறிப் போற்றும்[2]
சுத்தராய் நகைத்தி ருக்கத்
துயரது தோன்றா தென்றே! (13)

என்றது, யாதா மொருவனுக்கு, உயிர்ச்சேதம் பொருட் சேதமான வியாகுலங்கள் வந்தபோதில், புத்திமானானவன், மனதிலே, தானே தேறிக்கொண்டு நகைத்தானாகில், அந்த வியாகுலமானது, தோத்துப்போமென்றவாறு.

சீலித்துத் தரும பாவம்
செய்கையு மறிந்து மென்றும்
ஆரிக்கும் பெரியோ ராகாத்
தொழிலுக்கு மார னென்போல்
கூலிக்குங் கழுவி லேறிக்
கொள்வரோ வென்று மந்த
சோலிக்குங் கைவை யார்கள்
அறிவினால் துலங்கு வாரே! (14)

என்பது, யாதொரு பெரியோர்களாயி, புண்ணிய பாவம் அறிந்த பேர்கள், ஆகாத்தொழில் வந்தால் அதை ஏற்றுக் கொள்ளார்கள். அதென்போல வென்னில் கூலிக்குக் கழுவிலே யிருக்கிற பேருண்டோ வென்றால் அந்தத் தொழிலுக்கு மிசையார்கள் என்றவாறு.

துற்சனர்[3] தனக்குத் தானும்
துரைத்தனங்[4] கொடுத்த லேனுஞ்
சற்பனை துரோகங் கேடு
தானினைத் திடுவா ரென்போல்

1. முற்றிடும். 2. தேரிப் போன்றும் என்றுளது. 3. துற்ச்சனர் என்றுளது. 4. துரைத்தினங் என்றுளது.

மற்கடந் தானு மாகி
வாலிலே தேளுங் கொட்டி
உற்றிடுங் கொள்ளி யீய்ந்தா
லூரெலாம் சுடும்போ லென்றே! (15)

என்றது, துற்சன னானவனுக்கு அயிச்சுவரியமும் துரைத்தனமும் வந்தால், பழிபாவங்களுக்கு அஞ்சாமல் கேடு நினைப்பான், அதென்போல வென்னில் குரங்குமாய்த் தேளுங் கொட்டிக் கொள்ளியுங் கையிலே கொடுத்தால் ஊரெல்லாஞ் சுடும்போ லென்றவாறு.

இடங்கருக் கிடுக்கம்[1] வந்தா
லகற்றுத லீனம் போல
விடங்கள்தேள் நெருப்பில் வீழ்ந்தால்
எடுத்துவிட் டவனைக் கொட்டும்
அடங்கிடாத் துற்ச னர்க்கு
அருள்செயின் தேள்போ லாங்காண்[2]
திடங்களா லுபகா ரங்கள்
செய்வது திண்ணந் தானே! (16)

என்பது, துற்சனனானவனுக்கு யிடுக்கம் வந்த வேளையிலே, யாதாமொருவன் உபகாரம் செய்ததே யுண்டானால், உடனே அபகாரஞ் செய்வான். அதென்போல வென்னில், தேளானது நெருப்பிலே வீழ்ந்தால், எடுத்து விட்டவனைக் கொட்டுமாம்போ லென்றவாறு.

நிதிதெரி சித்தால் போகம்
நேரிடு மவர்கள் தானும்
மதிதெரி சித்தால் வாசம்
மணத்திடு மன்றல் நல்லோர்
பதிதெரி சித்தால் முத்தி
பலன்தரும் தீக்கு ணத்தால்
சதிசெய்துற் சனரைக் கண்டால்
பாவங்கள் சம்ப விக்கும்!

1. இடுக்கண்-துன்பம். 2. தென்போலாங்காண் என்றுள்ளது.

என்றது, அர்த்தத்தைத் தெரிசித்தால் போகஞ் சம்பவிக்கும். புஷ்பத்தைத் தெரிசித்தால், வாசனை சம்பவிக்கும். பெரியோர்களைத் தெரிசித்தால் மோட்சஞ் சம்பவிக்கும். துற்சனரைக் கண்டால் பாவங்கள் சம்பவிக்கு மென்றவாறு.

துற்சனர் முன்னே நல்ல
துலங்கிய மது(ர) மான
விற்பன கவிதை வித்தை
விளம்பிடி லவர்கள் தங்கள்
அற்பமாங் குணத்தி னாலே
அவகடஞ்[1] செய்வா ரென்போல்
மற்கட கத்தின் கைப்பூ
மாலைதான் படுவா ரன்றே! (18)

என்றது, துற்சன னானவன் முன்னே, நல்ல மதுரமான கவிதைகளைச் சொன்னால், அதை, அவகடஞ் செய்வான். அதென்போல வென்னில், குரங்கின் கையிலே கொடுத்த பூமாலையோ டொக்கு மென்றவாறு.

செகந்தனிற் புலவ ராகிச்
சேர்ந்ததுற் சனங்கள் தானே
அகந்தனி லருக்கு மாகி
லவணக்கை விடுவா ரென்போல்
இகந்தனி(ல்) மணியி னாலே
யிலங்கிய பணிகள் பூண்டால்
சிகந்தனை விடுத்த ருண்டு
தூரத்தே[2] செல்வர் போலாம்! (18)

என்றது, வித்துவானாயிருந்து, துற்சனனாயிருந்தானாகில், அவனைக் கைவிடுவார்கள். அதென்போல வென்னில்

---

1. அவமதிப்பு - பொல்லாங்கு. 2. தூரத்தை என்றுளது.

பாம்பானது நல்ல நவரத்தினங்களினாலே பூசணங்களாயிருந்தாலும் சர்ப்பத்தைக் கண்டால் பயப்படுமாப்போலென்றவாறு.

விஞ்சைய ரருமை தன்னை
விஞ்சைய ரறிய வேணும்
புஞ்செய லறிவா னீன்ற
புகழதை யறியா ரென்போல்
விஞ்சிய மகப்பே றான
வேதினை மலடி தானும்
கிஞ்சித மறியார் போல
யிருந்திடுங் கேள்வி தானே! (20)

என்றது, வித்துவா னருமையை வித்துவா னறிய வேணும். அல்லாதா ரறியப் போகாது. அதென்போல வென்னில், மலடியானவள், பிரசவ வேதனை யறியாதாள் போலென்றவாறு.

புத்தகந் தன்னில் வித்தை
போதவே யெழுதி வைத்து
மத்தமே பக்கு வத்துக்
காமென வயலார் கையில்
சித்தமாய்க் கொடுத்த பொன்னுந்
தேசசஞ் சார சேயு
முத்தயித் தரும மூன்று
முண்டெடன்ப துதவா தன்றே. (21)

தான் பாடம் பண்ணாமலே புத்தகத்திலே யெழுதிக் கட்டி வைத்திருக்கின்ற வித்தையும் ஆபத்துக் காலங்களிலுதவுமென்று பிறத்தியார் கையிலே கொடுத்துவைத்த திரவியமுந் தேச சஞ்சாரமாத் திரிகின்ற பிள்ளையுமிந்த மூன்று காரியங்களு முண்டெடன்கிறதே யல்லாமல் ஆபத்துக்குதவாது. (எ-று.)

பாத்திரா பாத்தி ரங்கள்
பார்த்தநாள் பசுவுக் கெந்த
மாத்திரந் திரண மீந்தால்
பால்தரு மந்தப் பாலைப்
பார்த்திடிற் பாம்பி னுக்கு
விஷமதே வளரு மன்னே
யேத்தபாத் திரம றிந்து
ஈந்திடக் கடவ தென்றே. (22)

சற்பாத்திரமென்று அசற்பாத்திரமென்று மிரண்டு விதமுண்டு. அதன்போலவெனில் பசுவானதுக்குத் திரண் கொடுத்தால் பாலைக்கொடுக்கும். அந்தப் பாலைப் பாம்புக்கு வார்த்தால் விஷத்தைக் கொடுக்குமாப்போல் (எ-று.)

தானமாம் பாத்தி ரத்தில்
விதமது தான மூன்றாம்
ஆனஉத்தம மத்திமம்
அதமத்தோ டாக மூன்றாம்
வாகனங் காய்ந்த கத்தில்
வீழ்ந்திடும் வனச மீதிற்
போனநீ ருள்ள மட்டும்
பொருந்துசிப் பியின்முத் தாமே! (23)

என்றது, தான தருமம் பண்ணுமிடத்தில், உத்தம பாத்திரம், மத்திம பாத்திரம், அதம பாத்திரம் என்று மூன்றுண்டு. அதென்போல வென்னில், ஆகாசத்திலே யிருந்து வருஷிக்கிற மழைத் துளியானது, காய்ந்த இரும்பிலே வீழ்ந்தால் ஒன்றுமில்லாமல் சுவரிப்போம். தாமரையிலே வீழ்ந்தால் வீழ்ந்தபடியே யிருக்கும். முத்துச் சிப்பியிலே வீழ்ந்தால், விலை மதிக்கப்படாத முத்துப்போல் வர்த்திக்கு மென்றவாறு.

திரைபெருஞ் சமுத்தி ரத்தில்
　　　　பேய்ந்தநீர் மழையும்[1] நெய்பால்
குறைவற உண்டோர்க் கன்னம்
　　　　கொடுத்தலுங் குபேர னான
பிறபலர்க் கீயுஞ் சொற்ன
　　　　தானமும் பிருதி மன்றி
விறல்பெருந் தான மூன்றும்
　　　　விருதாவென விளம்பி னாரே!

என்றது, சமுத்திரத்திலே பேய்ந்த மழையும் நிறையச் சாப்பிட்டவனுக்குக் கொடுக்குற அன்னதானமும், திரவிய சம்பன்னன் கையிலே கொடுக்குற சொற்ன தானமும், இந்த மூன்று தானமும் விருதாவென்றவாறு.

நதிதரு வான மூன்றும்
　　　　நலந்தரு முபகா ரங்கள்
இதமுடன் செய்வ தல்லாமல்
　　　　தாமுப காரஞ் செய்யார்
மதிபெறு நல்லோர் தாமும்
　　　　வழங்கிடு முபகா ரத்துக்
கெதிருப காரங் கொள்ளார்
　　　　அவனியில் விளம்புங் காலே.

என்றது, ஆறுகள் பெருகினாலும், விருட்சங்கள் பழுத்தாலும், மேகங்கள் வருஷித்தாலும் லோகத்துப் பிரதைகளுக்கு[2] உபகாரஞ் செய்யுறதே யல்லாமல் பிரதி உபகாரஞ் செய்கிறதில்லை. ஆகையால் நல்லோர்கள் ஒருத்தருக்கு உபகாரஞ் செய்தால், அதற்கு எதிருபகாரங் கொள்ளார்களென்றவாறு.

---

1. மனையம் என்றுளது.　　2. பிரஜை - குடிமக்கள்.

அகத்துணை மனைவி யாக்கை
துணையதாந் துணைய தாகுஞ்
செகந்தனில் செல்லுஞ் தேசாந்
திரிக்குநற் சேர்ந்த வித்தை
சுகத்தொடு பரலோ கத்தில்
துலங்கிட வருளோ டென்றும்
இகந்தனிற் செய்த தன்மம்
துணையதா மியற்றுங் காலே! (26)

என்றது, வீட்டுக்குத் துணை, பெண் சாதி, சரீரத்துக்குந் துணை, சகோதரன். தேசாந்திரத்துக்குத் துணைதான் கற்ற வித்தை. பரலோகத்துக்குத் துணை பூலோகத்திலே தான் செய்த தன்ம மென்றவாறு.

நீர்நுழை யாவி டத்தில்
நெய்புகும் நெய்க ளேனும்
மோர்நுழை யாவி டத்தில்
பால்புகும் பால்க ளேனும்
பேர்நுழை யாவிடத்தில்
புகைபுகும் புகைக ளேனும்
சீர்நுழை யாவி டத்தில்
தரித்திர னுழைவா னென்றே! (27)

என்றது, நீர் நுழையாவிடத்திலே, நெய் நுழையும் நெய் நுழையாவிடத்திலே, மோர் நுழையும். மோர் நுழையாவிடத்திலே, பால் நுழையும், பால் நுழையாவிடத்திலே, புகை நுழையும். புகை நுழையாவிடத்திலே தரித்திரன் நுழைவா னென்றவாறு.

புலியுயிர் போகு[1] மட்டும்
பொருந்தி(ய) அதனை யீயா[2]
வலிதுறு வீரன் றானும்
மரிப்பின்றிப் புறம்வ ழங்கான்

1. போக என்றுளது. 2. யீயான் என்றுளது.

பொலிவுறு கற்பு ளாரும்
போன்றதன் றனங்க ளீயார்[1]
நலிவுறு லோபி சீவன்
ஒளியெனு மொன்னு நல்கான்! (28)

என்றது, புலியானது, தன் சீவன் போனாலொழிந்து தன் தோலைக் கொடாது[2]. சுத்த வீரனாயிருக்கிறவன் தன் சீவன் போனா லொழிந்து தன் முதுகு (காட்)டான். உத்த(ம) ஸ்ரீயானவள்[3], தன் சீவன் போனாலொழிந்து ஸ்தனங்[4] கொடாள். உலுத்தனா யிருக்கிறவன், தன் சீவன் போனாலொழிந்து, ஒருத்தருக்கு ஒரு காசு கொடானென்றவாறு.

அன்னையே சென்றால் வாய்க்கு
ருசிநஷ்ட மையன் றானும்
பின்னையே யத்தால்[5] வித்தை
பேணுதல் நஷ்ட மாகும்
பன்னிடத் துணைவ ரற்றால்
சரீரத்தில் பாதி நஷ்டம்
தன்னிட பாரி யற்றால்
சருவாங்கம் நஷ்டம் தானே! (29)

என்றுது, மாதா மரித்தால், வாய்க்கு ருசி நஷ்டம், பிதா மரித்தால், வித்தை நஷ்டம், சகோதரம் மரித்தால் சரீரத்தில் பாதி நஷ்டம். பெண்சாதி[6] மரித்தால் சருவாங்கமும்7 நஷ்டமென்றவாறு.

எண்புத்தி தனது புத்தி
யியல்பதா மிலதே யாகில்
நன்புத்தி மூத்தோர் புத்தி
நன்றிட தன்றி டாமல்

---

1. ளீயான் என்றுளது. 2. குடாது என்றுளது. 3. பெண். 4. நகில்: முலை. 5. அற்றால். 6. மனைவி. 7. எல்லாமும்.

பண்பற்ற பலபேர் புத்தி
நாசமா மதிலு மெத்த
பெண்புத்தி தானுங் கேட்டால்
பிரளைய மாரு மென்றே! (30)

என்றது, யாதாமொருவன், ஒரு காரியத்தினை யோசனை பண்ணுமிடத்தில், தன் புத்தியால் வருகிறது. உத்தமல்லது, பெரியோர் புத்தி, அதிலும் உத்தமம். மற்ற பல பேர் புத்தி, நாசமாகும். அதிலும் பெண்புத்தி பிரளைய நாசமா மென்றவாறு.

உற்றபூ மிக்குப் பாரம்
உவரியு மலைக ளெட்டும்
மற்றது பார மென்று
வையகந் தன்னின் மீது
கற்றனுக் கடுந்து றோகங்
கனகவே விசுவா சித்து
வைத்தவர்க் கடுந்து ரோகம்
மகாபார மாகுந் தானே! (31)

என்றது, பூமிக்குப் பாரம் சப்த சமுத்திரமும், அஷ்ட குல பருவதமும், (ஆம்). ராசாவுக்குப் பாரம், அவன் செய்த கடுந் துரோகம். அதிலும், விசுவாச பாதகம் மகாபார மென்றவாறு.

பெற்றதில் மகிழ்ச்சி கொள்ளாப்
பிரமாண னெதுபெற் றாலும்
வைத்ததில் மகிழ்ச்சி கொண்ட
மன்னனும் வயங்கும் லெட்சை
உற்றது யிருக்கு மந்த
வேசிய ருயர்ந்த ஞானம்
பற்றற்ற குலத்து மாதர்
நஷ்டமாம் பகருங் காலே!

என்றது. பெற்றதிலே பிரியப்படாத பிராமணரும், பெற்றதைப் போதும் போதுமென்ற ராசாவும், வெட்கித்திரியும் வேசியும், லெச்சையில்லாத குலப் பெண்ணும் (ஆக) இந்த நான்கு பேரும் நஷ்டமாய்ப் போவார்களென்றவாறு.

வறுமையா ளர்க்கு ரெண்டூர்
பயிர்செயில் வழிக்க ரைக்கே
பெருகிடும் நிலமும் ரெண்டு
பெண்டீரு மெவர்க்குத் தானும்
முரிபிணை சாட்சி சொல்ல
லுற்றயிக் கரும மைந்தும்
திரமுடன் தனக்குத் தானே
அனர்த்தங்கள் தேடு வாரே! (33)

என்றது, தரித்திரவானுக்கு ரெண்டூர் பயிர்ச்சிலவும் வழிக்கரையிலே உழுத கொல்லையும், இரண்டு பெண்சாதியைப் படைத்தவனும், ஒருவனுக்குப் பிணையேற்றுக் கொள்ளுகிறவனும், சபையிலே சாட்சி சொல்லுகிறவனும் இந்த ஐந்து காரியமும் தனக்குத் தானே அனர்த்த மென்றவாறு.

கடன்படு பிதாவு மெங்கும்
கண்டவர் தங்கட் கெல்லாம்
உடன்படு மன்னை தானும்
உயர்ந்திடும் ரூபந் தானே
யடைந்திடும் பாரி வித்தை
யற்பசி யாத பிள்ளை
தடங்கணா யிவர்கள் நான்கும்
சத்துரு தனக்கா மென்றே! (34)

என்றது, கடன்பட்ட தகப்பனும், விபச்சாரியான மாதாவும், ரூபவதியான பெண்சாதியும், வித்தையை அப்பியாசம்

செய்யாத பிள்ளையும் இந்த நாலு பேரும் தனக்குச் சத்துருவா மென்றவாறு.

தேசிக மவ்வ னங்கள்
சிறந்தநற் கலன்க ளன்றிக்
காசுலா வியாகு லங்கள்
கனக்கவே யிருந்தா ரேனும்
நேசமாம் வித்தை யற்றால்
நிறைந்திடு முருக்கம் பூவே
வாசனையில் லாமல் நின்று
மயங்கிடும் வரலா றென்றே! (35)

என்றது, யாதாமொருவன் எவர்ன்னமாய்1 சகல ஆபரண பூஷணனுமாய்ச் சவுந்தரியவானா யிருந்தாலும் வித்தை யில்லாதவன், வாசனையில்லாத முருக்கம் பூவோ டொக்கு மென்றவாறு.

வித்தையே யுளதால் ம்ாதா
பிதாவொடு பாரி வேண்டி
யுத்தருள் சுகத்தைக் காட்டும்
உயர்சுத னெங்கு சென்றால்2
மெத்தவே புகழு முண்டாம்
விரைமலர் திருக்க டாட்சம்
நித்திய முண்டாங் கற்பக
விருட்சம்போல் நிறைந்த வித்தை! (36)

என்றது, யாதா மொருவனுக்கு வித்தை யுண்டானால் மாதா, பிதா, பாரி3 இவர்களுக்குக் கொடுக்கிற சுகத்தைக் கொடுக்கும் பிள்ளையு மெந்தத் தேசத்திலே சென்றாலு மிகுதியுங் கீர்த்தி உண்டாகும். லெட்சுமி கடாட்சம் உண்டாகும். கற்பகவிருட்சம் போல் நிறைந்த வித்தை என்றவாறு.

---

1. யௌவனம்: இளமை. *2. உயர்ந்திடுமெங் சென்றதால் என்றுளது.*
3. மனைவி

ஏர்பெறு மர்ச்சு னர்க்கு
யியம்புவ ரைவர்[1] தூதர்
ஆறெனும் வாவி கூபந்
தடாகமுண் டாக்கி யோர்நாள்
நீர்பெறச் செய்தா ரேனும்
நித்திய மவர்கள் தானும்
பேர்பெறு குலமூ வேழும்
முத்திகள் பெறுவர் தாமே! (37)

என்றது, கிஷ்ட்ண சுவாமியானவர், தன் தோழனான அர்ச்சுனராசனுக்குச் சொல்லுவார். யாதாமொருவன், ஏரி, கிணறு, குளங்களு முண்டாக்கி, ஒரு நாளாகிலுந் தண்ணீர் நிற்கப் பண்ணினராகில் அவர்கள் மூவேழு குலமும் முத்தி பெறுவார்களென்றவாறு.

உத்தம னிரவில் வேசி
ஒருமனைக் கருகே சென்றால்
மெத்தவுஞ் சமுச்சி யங்கள்
விரைந்திடு மென்போ லென்னில்
புத்துமா யிருட்டு மாகிப்
பொருந்திய பழுதை மேலே
கத்தியே கிடந்தா லய்யந்
தோன்றிடும் போல்வர் தாமே! (38)

என்றது, உத்தமனாயிருக்கிறவன் ராத்திரி காலங்களிலே ஒரு உத்தியோகத்தைக் குறித்து, வேசியர் வீதியிலே சென்றானாகில், சமிசயந்[2] தோன்றும்,[3] அது எப்படியென்றால், புத்துமா யிருட்டுமாகி அதின்பேரிலே, பழுதைகிடந்தால் சமிசயந் தோன்று மென்றவாறு.

---

1. வைய்யர் என்றுளது.

2. சந்தேகம்.

3. சமுசியந்தோத்தும் என்றுளது.

சிறியவூ ரிருப்பான் றானும்
அற்பனைச் சேவிப் போனும்
பிரியமாய்ப் புலாலுண்[1] பானும்
பெருஞ்சின மனைவி யோனும்
வறிஞனாய்த் திரிவோன் றானும்
மகளிரைத்[2] திரள்பெற் றோனும்
அறுவகைப் பேரும் பூமி
தனில்நர கழுந்து வாரே! (39)

என்றது, சிற்றூரிலே குடியிருப்பவனும், கொஞ்சக் காரனைச்[3] சேவிக்கிறவனும், பொல்லாத மாங்கிஷத்தைப் பொசிக்கப்பட்டவனும், கோபமுடைய பெண்சாதியைப் படைக்கப்பட்டவனும், பெண்களைத் திரளாகப் பெற்றவனும், இந்த ஆறுவகை பேரும் பூலோகத்திலே தானே நரகத்தை யனுபவிப்பார்களென்றவாறு.

கன்னியை யீயில் தந்தை
கல்விமான் தனையே வேண்டும்
தன்னி(ட) மியு மன்னை
தனபதி தனையே வேண்டும்
உன்னிய சுற்றத் தார்நல்
லுறவினை வேண்டு வார்கள்
மின்னிய கன்னி ரூப
வானையே வேண்டி நிற்கும்! (40)

என்றது, பெண்களை வாழ்க்கைப்படுத்து மிடத்தில் பிதாவானவன் வித்துவானுக் காசைப்படுவான். மாதாவானவள் தனவானுக்காசைப்படுவாள். சுற்றத்தார் நல்லுறவினுக்கு ஆசைப்படுவார்கள். கன்னிகையானவள் நல்ல ரூபவானுக் காசைப்படுவாளென்றவாறு.

---

1. பிலாலுண் என்றுளத. 2. மகவியைத் என்றுளது. 3. அற்பன்.

மங்கையை வாலை நாளி
லன்பொடு பிதாவே காப்பான்
பொங்கிய யௌவ னத்தில்
பொருந்துபர்த் தாவே காப்பன்
தங்கிய மூப்பில் தங்கள்
தனையனே காக்கு மன்றி
நங்கையர்க் கொருகா லத்துஞ்
சுதந்திர மில்லை தானே! (41)

என்றுது, ஸ்ரீயானவள் வாலையிலே[1], பிதா ரெட்சிப்பன். யௌவனத்திலே, பர்த்தா[2] ரெட்சிப்பன். முதுமையிலே புத்திரன் ரெட்சிப்பன். ஆதலால், பெண்களுக்கு ஒருக்காலுந் தனிச் சுதந்திரம் இல்லையென்றவாறு.

தேவதை சபைபு ராணஞ்
செப்பிடுஞ் சபைகள் பூமி
காவலன் சபைகள் ராசன்
வயித்தியன் கணித நம்பி
போவது கரும மாகி
லெதுவெனும் பொருந்தக் கொண்டு
ஈவது கருமம் நன்றாம்
வெறுங்கரத் தெய்த லாகா! (42)

என்றது, தெய்வ சபை, புராண சபை, ஆசாரியன் சபை, வயித்தியன் பக்கல், சோசியஞ் சொல்லுகிறவர்களிடத்திலே காரியங் கொள்ளும்போது, ஏதாகிலுங் கொண்டுபோக வேணும். வெறுங் கையிற் போகலாகா தென்றவாறு.

அங்கியை யவித்துப் பின்னும்
அவியாத சேடத் தானும்
தங்கிய மாத னங்கள்
கொடுத்துப்பின் தவிராச் சேடம்

1. குழந்தைப் பருவத்திலே. 2. கணவன்.

பொங்கிய தோரர் தன்னைச்
செயித்துப்பின் தவிராச் சேடம்
மங்கிடாச் சேட மூன்றும்
வருத்திக்கு மருந்து மாற்றே! (43)

என்றது, அங்கியை அவித்தும் அவியாத சேடமும் கடன் கொடுத்துக் கொடாத சேடமும், சத்துருவை செயித்துஞ் செயிக்காத சேடமும் மீளவும் வர்த்திக்கு மாதலால் சேடமறப் பண்ணுவா மென்றவாறு.

ஆதியாம் பகைஞர் தன்பா
லாங்கரு மங்கள் வேண்டி
நீதியாஞ் சுத்த மாக
நேயமாய்க் கொண்டு வுற்ற
சேதியாங் கரும மாகில்
சேர்ந்துமுப் பகையைத் தானே
ஏதினால் துடங்க லாமோ
அப்படி யிசைத்துக் கொள்வார்! (44)

என்றது, சத்துரு வானவ னிடத்திலே காரியங் கொள்ள வேண்டில், அவனை மித்துருவாகக் கொள்வான். காரியம் முடிந்தவாறே, பழைய சத்துருவாகக் கொள்வானென்றவாறு.

இணங்கிட மூர்க்க ருக்கு
எத்தனை யிதஞ்சொன் னாலும்
வணங்கிதுற் குணம்வி டார்கள்
வளர்த்திடுஞ் சுணங்க னுக்கு
நிணங்கொள்பா லன்ன மீய்ந்து
நிறைந்தபொற் றுடரும் போட்டு
மணம்கொள்தண் டிகையில் வைக்கில்
குலைத்தது கடிக்கும் வாறே! (45)

என்றது, துர்ச்சனா யிருக்கிறவனுக்கு, எத்தனை யிதஞ்செய்தாலும், தங்கள் முற்குணம் விடார்கள், அதென்போல

வென்னில், நாயானதுக்கு நல்ல மாங்கிஷமும், நல்ல பாலும், அன்னமுமிட்டு, பொற்சங்கிலியுங் கழுத்திலே போட்டு, தண்டிகைமேல் வைத்தாலுங் குலைத்துக் கடிக்குமாப்போ லென்றவாறு.

இகலிரு வருக்குண் டாகி
யிருவரி லொருவ ரற்றால்
பகையறு மிருவர் கோபம்
பணிந்திடி லொருவ ராறும்
மகவினைப் பெற்ற வன்றே
மடமின்னார்க் கிளமை போகும்
புகன்றொரு வன்பாற் சென்று
யாசிக்கிற[1] பெருமை போகும்! (46)

என்றது, ஒருவரோடொருவர் பகைத்திருந்தால் இருவரி லொருவ ரற்றால், பகை தீரும். அதுவல்லாமல் இருவரி லொருவர் நமஸ்காரம் பண்ணினவாறே கோபந்தீரும். ஸ்ரீயானவளுக்குப் பிள்ளை பெற்றவாறே அழகும் இளமையும் போம். ஒருவரிடத்திற் சென்று யாசிக்கில் தன் பெருமை போகு மென்றவாறு.

அவரவர் தனக்கு முள்ள
ஆயிசுந் திருவு மல்லால்
இவர்தன் வித்தை யற்ற
மெழில்மர ணங்க ளைந்தும்
தவமுடைப் பதுவும் வேதன்
தானதைத் துடங்கி யென்றும்
சிவனுட னருளி னாலே
கெற்பத்தில் நிச்ச யிப்பான்! (47)

என்றது, அவரவர் தனக்குள்ள ஆயிசும், திருவும், வித்தையும், ஐசுவரியமும், புத்தியும்[2] இவை ஐந்து காரியமும்,

---

1. ஆசிக்கில் என்றுளது.

2. செய்யுளில் வந்த மரணங்கள் இதில் காணப்படவில்லை.

சிவனுட அனுக்கிரகத்தினாலே, விரும தேவனானவர், கெற்பத்திலே தானே நிற்கச்செய்து[1] விடுவாரென்றவாறு.

உற்றிடுங் குளத்தில்[2] கொட்டி
யாம்பல்பங் கயங்க ளோடும்
மற்றமச் சமும்செ னித்து
வெவ்வேறு வகையாம் போலே
உற்பனத் தொருத்தி கெற்பத்
துடன்பிறந் தார்க ளேனும்
விற்பன நிறங்கு ணங்கள்
வேறுபட் டிருக்கு மென்றே! (48)

என்றது, ஒரு குளத்திலே கொட்டியும், ஆம்பலும், நெய்தலும், தாமரையும், மச்சமும் பிறந்தாலும், அவரவர் குணமும், நிறமும் வேறுபட்டிருக்கும். அப்படிப்போல ஒருத்தி பெற்ற பிள்ளையானாலும், குணமும், நிறமும் வேறுபட்டிருக்குமென்றவாறு.

வண்டனு சரிக்கும் பூவை
[3]மலன்றிரு நயவான் றன்னைக்
கண்டனு சரிக்கும் நீரைக்
கனத்தபள் ளத்தைத் தேடிக்
கொண்டனு சரிக்கு மென்று
குலாவிய விதிதான் புத்தி
அண்டனு சரிக்கு மென்று
அறிவா ரறிந்து கொள்வார்! (49)

என்றது, வண்டானது நல்ல புஷ்பத்தை[4]யனுசரிக்கும். லெச்சுமியானவள் நயக்குணவானை அனுசரிப்பாள். தண்ணீரானது நல்ல பள்ளத்தை அனுசரிக்கும். விதியானது புத்தியை அனுசரிக்குமென்றவாறு.

---

1. செயித்தது என்றுளது. 2. மலன்=? 3. கொழத்தில் என்றுளது. 4.பொஷ்ப்பத்தை என்றுளது.

சீர்ப்பயிர் செய்வோர்க் கில்லை
கருவிகள் செபங்க ளென்றும்
பார்பெறச் செய்வோர்க் கில்லை
பாதக மியம்பா தோர்க்கும்
ஏற்பெரு மவுனர்க் கில்லை
கலகமுந் தெரிந்தி ராவில்
பாற்பெறச் சாக்கி ருதையைப்
பண்ணினாற் பயமு மில்லை! (50)

என்றது, கிருட்சை[1] பண்ணுகுறவனுக்குப் பஞ்சமில்லை. செபம் பண்ணுகுறவனுக்குப் பஞ்சமில்லை. மவுனமாயிருக்குறவனுக்குக் கலகமில்லை. சாக்கிருதை பண்ணுகுறவனுக்கு ராத்திரி காலத்திலே பயமில்லை யென்றவாறு.

மறையவர் வேசி கோழி
வயித்தியன் சுணங்க னைந்து
முறையுடன் தங்கள் சாதி
கண்டிடில் முனிந்து சீறும்
நிறைபெருங் கரும மன்றி
நிஷ்கரு மங்க ளாகா
குறைவறச் சண்டை செய்வா
ரவரவர் குணங்கள் தானே! (51)

என்றது, பிராமணரும், வேசியும், கோழியும், வயித்தியனும், சுணங்கனும்[2] இவை ஐந்து பேரும், தங்களுடைய சுயசாதியைக் கண்ட மாத்திரத்திலே சண்டைப் படுவார்களென்றவாறு.

கேசமு முகிரும் பல்லும்
கிளர்த்திய வேந்துந் தந்தம்
வாசமே யிழந்து பின்னும்
மற்றுமோ ரிடங்கள் செல்லின்

1.. விவசாயம், பயிர்த்தொழில். 2. நாய்.

நீசமே யடைந்து யாரும்
நிகழ்ச்சிசொல் லிடுவார் போலப்
பேசிய மாதர் தங்கள்
நிலைவிடிற் பெருமை போகும்! (52)

என்றது, மயிரும், நகமும், பல்லும், ராசாவும் இவர்கள் தங்கள் இருப்பிடமும் விட்டு வேறே யிடங்களிலே செல்லில் கொஞ்சப்பட்டுப்[1] போவார்கள். அப்படிப் போல யாதா மொருவன், தன்னிலைவிட்டு அப்புறம் போனானாகில் கொஞ்சப்பட்டுப் போவா னென்றவாறு.

ஊனமே யெவர்க்குஞ் செய்து
ஒருபொருள் தேடி நல்ல
தானமுந் தவமு மன்றித்
தான்பொசிப் பதுவு மன்றி
யீனமாய்ப் புதைத்த ருத்தம்
எரிமன்னர் தோயுஞ் சேறார்
நானனால் வகைக்கு மாகில்
நசித்திடு மறிவி லார்க்கே! (53)

என்றது, யாதாமொருவன், திரவியங்களைத் தேடித் தானமுந் தவமுமில்லாமல், தான் பொசிப்பது மல்லாமல் புதைத்து வைத்த திரவியம், அக்கினியினாலும், ராசாவினாலும், தண்ணீராலும், கள்ளராலும், யிந்த நாலுவகைப் பேருக்குள்ளாகிக் கொஞ்சப்பட்டுப் போமென்றவாறு.

தாசிபோற் பணியிற் புத்தி
தன்னிலே அமைச்சர் போலும்
தேசினிற் திருவு முட்டுஞ்
சினேகத்தி லன்னை போலும்

---

1. சிறுமைப்பட்டுப்

மாசிலாப் பொறுமைக் குப்பூ
மாதென மருவு நாளில்
வேசிபோல் குணமி தாறு
மிகுந்தகற் பினுக்குத் தானே ! (54)

என்றது, ஸ்ரீயானவன் காரியத்திலே வந்தால் அடியாளைப் போலவும், புத்தியிலே வந்தால் மந்திரியைப் போலவும். ரூபத்திலே வந்தால் லட்சுமியைப் போலவும் பொறுமையிலே பூமிதேவியைப் போலவும், சரீர லட்சணையிலே மாதாவைப் போலவும், சயனத்திலே வேசியைப் போலவும், இந்த ஆறு காரியமும் உண்டானவள் பதிரவிதை என்றவாறு.

தலைவனோ டெதுத்து ரைத்துந்
தனஞ்சிறிது[1] தேடித் தானும்
பலானு கூலி யாயும்
ப(ர்)த்தாமுன் னசனஞ் செய்து
கலகமா யொருவர் பேச்சை
யுரைத்துப்போர் காண வாழும்
நலமிகுஞ் சேய்கள் பத்துப்
பெறுகினும் விடுவார் நல்லோர் !

என்றது, பர்த்தா முன்னே எதிர்த்து வார்த்தை சொல்லியும், சிறுதனந் தேடியும், பலருக்கனு கூலியாயும், பர்த்தாவுக்கு முந்தி அசனம் பண்ணுவாளும், ஒருவர் பேச்சை ஒருவரோடே சொல்லிக் கலகம் பண்ணுவாளும், இவர்கள் பத்துப்பிள்ளை (களை)ப் பெத்தாலும் அவர்களைக் கைவிடுவார்க ளென்றவாறு.

உற்றிடு மெண்ணெய் தானு
முகந்திட மறையோர்க் கங்கம்
பற்றியே பிடிக்கப் பின்னும்
பரிந்துவ ருண்ட வெச்சில்

---

1. தனஞ்சிரு என்றுளது.

நற்றியே[1] யெடுக்கக் கோவே
நயந்துதன் கையாற் கீற[2]
நிற்றியங்[3] கோடி யெக்கியம்[4]
பலன்தரு நிகழ்த்துங் காலே! (56)

என்றது, எவர்க்கிலும் தலைக்கெண்ணெய் தேய்க்க பிராமணருக் கங்கம் வர்த்தனை பண்ண, அவர்களுண்ட யெச்சி லெடுக்க, பசுவைத் தன்கையாலே கீற5 நித்தியம் கோடி யெக்கியம் பண்ணின பலன்தரு மென்றவாறு.

பூவினிற் சனஞ்செய் பாவம்
பொருந்திடு வேந்துக் காகுங்
கோவினா லுற்ற பாவம்
புரோகிதர்க் கெனவே கூறும்
பாவக மில்லாள் பாவம்
பத்தாவுக் காகு மென்றே
ஏவல்செய் சீஷன் பாவம்
குருவினுக் காகு மென்றே! (57)

என்றது, தேசத்திலே சனங்கள் பண்ணின பாவம், ராசாவுக்காகும், ராசா செய்த பாவம் புரோகிதருக்காகும். ஸ்ரீ பண்ணின பாவம் பர்த்தாவுக்காகும். சீஷன் பண்ணின பாவம் குருவுக்காகும் என்றவாறு.

வேந்தொரு தருவுஞ் சாய்கை
மிகுந்தமந் திரியும் பூமி
போந்திடு மிலையு மூலம்
பூசுர ராகு மாதல்

---

1. நத்தியே. *2. ?* *3. நித்தியங்.*
4. வேள்வி. *5. ?*

வாய்ந்திடு மறையோர் தன்னை
மன்னவன் காப்ப னல்லால்
சேர்ந்திடு மூலத் தோடு
நாசமாந் திண்ணந் தானே ! (58)

என்றது, ராசாவொரு விருட்சமும், மந்திரியொரு சாய்கையும், பூமியொரு இலையும், மூலம் பிராமணரும் ஆனபடியினாலே ராசாவானவன் பிராமணரைக் காக்க வேண்டும். இல்லாதிருந்தால் மூலத்தோடும் நாசமாமென்றவாறு.

செகமெலாம் தெய்வா தீனம்
தெய்வமந் திரத்தா தீனம்
மகம்பெறு மந்தி ரந்தான்
மறையவர் தன்னா தீன
மிகம்பா மிரண்டு தானு
மியைந்திடு மறையின் கண்ணே
அகம்பெரு மந்த ணாளர்
அவர்களே தெய்வ மாமே ! (59)

என்றது, செகமெல்லாம் தெய்வாதீனம். தெய்வம், மந்திரத் தாதீனம். மந்திரம் பிராமணாளாதீனம். ஆகையினாலே பிராமணரே தெய்வமென்றவாறு.

வண்டிற்கு முழமைந் தாகும்
வாசிக்கு மதுவே பத்தாம்
கண்டுற்ற கரிக்குத் தானு
மாயிர முழங்கா ணென்பார்
வண்டுற்ற குழலா ளிந்த
வையகந் தன்னின் மீது
மிண்டுற்ற துர்ச்ச னன்றா
னிருக்குமூர் விட்டுப் போமே ! (60)

என்றது, வண்டியைக் கண்டால் அஞ்சு முழம் விலகுவாள். குதிரையைக் கண்டால் பத்து முழம் விலகுவாள். ஆனையைக்

கண்டால் ஆயிர முழம் விலகுவான். துர்ச்சனரைக் கண்டால் அவனிருக்குந் தேசம் விட்டுப்போவா னென்றவாறு.

தீர்க்கமா யொருவர் தன்மஞ்
செய்யெனச் சிந்தித் தேனும்
சேர்க்குநா ளதர்க்கி டுக்கம்
செய்யவே துணிந்து தானும்
வாக்கினால் சடத்தா லன்றி
மனதினால் வடுக்கள் செய்து
ஆக்கிடா வணஞ்செய் வார்கள்
அகோரமா நரகில் வீழ்வார்! (61)

என்றது, யாதாமொருவன் தன்மஞ் செய்யச் சிந்தித்து உத்தேசம் பண்ணுமிடத்தில், வாக்கினாலுஞ் சரீரத்தாலுமாக வொட்டாமல், அதற்கிடுக்கஞ் செய்தானாகில், அகோரமான நரகத்திலே வீழ்வார்க ளென்றவாறு.

மாயிரு ஞாலந் தன்னில்
தருமத்தின் கருமம் வந்தால்
நேயமாய்ச் சடத்தால் வாக்கால்
நிதியினா லெதுவே யேனும்
ஈதலால் சகாயஞ் செய்தால்
ஒன்றிடும் நீச ரேனும்
ஆயிரங் கோடி காலம்
அமருல காள்வா ரென்றே! (62)

என்றது, லோகத்திலே யாதாமொருவன், தன்ம காரியம் வந்தால் வாக்கினாலுஞ் சரீரத்தினாலும், அர்த்தத்தினாலும்[1] ஈந்து, சகாயஞ்செய்தால், நீசரானாலும், ஆயிரங்கோடி காலந் தெய்வலோகத்தை யாள்வார்களென்றவாறு.

---

1. பொருளினாலும்.

மின்னினை விபசா ரித்து
மிகுத்திடுந் தவத்தின் நன்மை
உன்னிய கோபத் தாலு
முற்றநீ[1] ருவட்டி னாலும்
பன்னிய மறையோர் நன்மை
பரத்தைதோள்[2] சேர்த லாலும்
மன்னனு மநீதத் தாலும்
அழிந்திடும் நன்மை தானே! (63)

என்றது, ஸ்ரீகளுடைய நன்மை விபசாரத்தினாலே அழியும். தவத்தினுடைய நன்மை, கோபத்தினாலே அழியும். தண்ணீருடைய நன்மை உவட்டினாலே அழியும். பிராமணருடைய நன்மை பரஸ்திரீயைச் சேர்தலாலே அழியும். இராசாவினுடைய நன்மை அநீதத்தினாலே அழியுமென்றவாறு.

தூசறு நீர்க்குச் சீதந்
துலங்கிய தோழ னுக்கு
தேசவஞ் சனையி லாமை
நேரிழை குணமே யாகும்
பேசிடும் பேச்சில் நன்மை
பெருகுமா தரவு தானே
போசனந் தனக்கி தெல்லாம்
பொருந்திய ரசங்கள் தாமே! (64)

என்றது, தண்ணீருக்கு ரசங் குளுமை, தோழனுக்கு ரசம் வஞ்சனையில்லாமை, ஸ்ரீகளுக்கு ரசம் குணம், வார்த்தைக்கு ரசம் நன்மை, போசனத்துக்கு ரசம் அன்புடனே அன்னமிடுகை யென்றவாறு.

---

1. முத்தநீ என்றுளது.

2. பறகைகொள் என்றுளது.

ஆசன மெண்ணே யோடாம்
போசன மிவைகள் மூன்று
மாசறத் தன்கை யாலே
வழங்கியே கொண்டா னாகில்
பேசிடு மாயிக நாசம்
பிறந்திடும் மைந்தர் நாசம்
தேசுறு மலராள் தானு
மிருந்திடாள் திண்ணந் தானே! (65)

என்றது, ஆசனம், எண்ணெய், போசனம் இது மூன்றுந் தன் கையாலே, யாதாமொருவன் செய்து கொண்டானாகில், ஆயிசு நாசம், புத்திரநாசம், லெட்சுமியும் இராள் என்றவாறு.

மதகரி பாம்பு புள்ளு
மனிதனால் கட்டுண் டெய்தும்
இதமுள மதியும் பானு
மிராகுவா லிடையு றுத்தம்
சிதமுள புத்தி மானை
தரித்திரஞ் செய்கை யாலும்
விதிவச மொருவ ராலும்
வெல்லுவ தரிதா மென்றே! (66)

என்றது, மத்த கெசமாயிருக்கிற யானையும், கால கோடி விசமுண்டான பாம்பும், ஆகாசத்திலே பறக்குற பட்சியும், மனிதர் கையிலே கட்டுப்படுவதும் சந்திர சூரியாள் ரெண்டுபேரும், ராகு, கேதுவினாலே கட்டுப்படுவதும், நல்ல புத்திமானாயிருக்கிறவன் தரித்திரியத்தினாலே யடிபடுகிறதும் விதிவசம். ஆதலால் விதியை ஒருவராலுந் தள்ளப்போகா தென்றவாறு.

புத்தியில் மிகுந்த வானாய்
போதவே யிருந்தா னாகில்
உத்திடுங் கரும மூன்றும்
உள்ளதா முரைக்குங் காலே

மெத்தவும் மலட னாகி
யல்லது மிடிய னாகி
பெற்றஅற் பாயிசு மாகி
பெருகவே யுண்டா மென்றே! (67)

என்றது, யாதொருவன் புத்தியிலே மிகுந்தவனா யிருந்தால், அவனுக்கு மூன்று காரியத்திலே, ஒரு காரியமுண்டாம். அதேதோவென்னில் மலடானாவது, மிடியனாவது, அற்பாயிசாவது, இந்த மூன்றிலே ஒரு காரியம் தப்பாதென்றவாறு.

வாலையோ டிணக்க மென்றும்
மதிப்பன்றிச் சிரித்த மின்பால்
சாலவே சண்டை செய்துந்
தருகணா ளரைச்சே வித்தால்
கோலியே கழுதை யேற
கூத்தியர் பாலில் வார்த்தை
சீலமா யுரைக்கின் றானும்
லவுத்துவஞ்[1] சேரு மென்றே. (68)

என்றது, சிறுபிள்ளைகளோடிணங்குகிறதும், காரிய மில்லாத அவலச் சிரிப்பும், ஸ்ரீகளுடனே சண்டைப் படுகிறதும், துன்மார்க்கரைச் சேவிக்கிறதும், கழுதையேறுகிறதும், வார்த்தையறியாத பேருடனே வார்த்தை சொல்லுகுறதும், தனக்கு லவுத்துவஞ்[2] சேருமென்றவாறு.

அடுத்தங்கே தமைச்சே விப்போர்
அவர்கள்மேல் குறைகள் நித்தம்
தொடுத்தங்கே நின்பா ராட்டி
தொல்வழக் கிடுவார் தங்க

1, 2. குறைவு.

ளிடத்தங்கே யிருந்து வுண்டி
இயற்றுத லெல்லாம் பாம்பின்
படத்தின்கீ ழெலியின் வாழ்க்கை
பண்ணுதல் போலா மென்றே! (69)

என்றது, யாதாமொருவன், தன்னைச் சேவித்தவர்கள் பேரிலே தினங்குறைகள் தேடிப் பாராட்டுகிறவனிடத்திலே சேவிக்கிறது, பாம்பின் படத்தின் கீழே, எலி குடிவாழ்க்கை பண்ணுமாப்போ லென்றவாறு.

வேந்தருக் கரசில் சிந்தை
மிகுந்தகா முகருக் கெல்லாம்
போந்திடுங் காமச் சிந்தை
பொருந்துயோ கிக்கு முத்தி
வாய்ந்திடும் வழிமேற் சிந்தை
வறிஞருக் களவில் லாத
நீந்தொணாச் சிந்தை யென்று
நீணிலத் தியங்குந் தானே! (70)

என்றது, ராசாவுக்கு ராச்சியத்தின் பேரிலே சிந்தை: யௌவனவானுக்குக் காமத்தின் பேரிலே சிந்தை: யோகீசுவரருக்கு மோட்சத்தின் பேரிலே சிந்தை: தரித்திரவானுக்கு வெகுசிந்தை யென்றவாறு.

கூபநீ ரால நீழல் குலவிய வடக்கு (வீடும்)
சாபமாம் புருவ மாதர் தனங்கள்தா னிவைகள் பானு
கோபநாள் குளிர்ச்சி யாயுங் குளிர்ச்சிநாள் வெச்சென் றாயு
சோபமே தீர்த்து நல்ல சுகத்தினை யளிக்கு மென்றே. (71)

(இ-ள்.) கிணற்று நீரும் ஆல்மரத்து நிழலும் வடக்குப் பார்த்த மச்சுவீடும் எவ்வர்ணமான ஸ்திரீகளுடைய தன்னியமும் இந்த நான்கும் கோடைக்காலத்துக்குச் சீதளமும், சீதள காலத்துக்கு வெப்பமுமாயிருந்து சகல சுகத்தையும் கொடுக்கும். (எ-று.)

அன்னியன் றானு மாகி விதங்களை யருளி னானால்
உன்னிய சுற்றத் தாரு முயர்ந்திடுஞ் சுத்த மாகிப்
பன்னிய வசித மேனும் பண்ணினால் விட்டு மெய்யில்
மன்னிய பிணிக்குக் காட்டின் மருந்தினால் தீரும் வாறே. (72)

(இ-ள்.) அன்னியனாக இருந்தும் இதங்களைச் செய்வானாகில் அவனைப் பந்துவாகக் கொள்வன்: பந்துவாக இருந்தும் அனீதத்தைச் செய்வானாகில் அவனைக் கைவிடுவார்கள். அதென்போலவெனிற் சரீரத்திலே கூடப்பிறந்த வியாதிக்குக் காட்டிலுள்ள மருந்தினால் தீருமாப்போல (எ-று.)

சோதிட மெண்ணு வோனுந்
தொல்வழக் குரைப்போன் றானும்
பேதமா யெவற்றுக் கேனும்
பிராயச்சித்தம் விதிக்கின் றானு
மேதமா வயித்தி யங்க
ளியற்றுவோ னிவர்கள் நூலின்
சோதினைப் படிசெய் யாதால்[1]
பிரமகத்தி தோஷஞ்[2] செல்லும்! (73)

என்றது, சோதிரிஷ மெண்ணுகுறவனும், வழக்குச் சொல்லுகுறவனும் ஏதுக்கும் பிராயச்சித்தம் விதிக்கிறவனும், வயித்தியம் பண்ணுகுறவனும், இவர்கள் சாத்திரப்படி விசாரியாமல் செய்தால் பிரமகத்தி தோஷமுண்டென்றவாறு.

சற்சனர் தனக்கு நன்மை
தான்செய்த இதமுஞ் செய்வார்
துற்சனர் தம்மைக் கண்டால்
துறந்தவர் முனிவ ரென்போல்

---

1. யாதல் என்றுளது.

2. பிற்மத்தி சோஷந் என்றுளது.

நற்குணக் கல்லை யூதில்
நீர்தரு நலமெண் ணாமல்
மற்றொரு கல்லால் மோதில்
கனற்பொறி வழங்கல் போலாம்! (74)

என்றது, சர்ச்சனனான பேர்க்கு நன்மை செய்து வணங்கினால், அவர்களிதாமே செய்வார்கள். துர்ச்சனரைக் கண்டால் முனிந்து சீறுவார். இதென்போலவென்னில் நல்ல சலவை பொருந்தியிருக்கிற கல்லை மெள்ள ஊதினால் நீர் தரும். அந்தக் கல்லை மற்றொரு கல்லால் மோதினால் நெருப்புப் பொறி வழங்குமாப்போ லென்றவாறு.

பருவங்கள் தப்பி நன்னூல்
படித்தலும் பசியில் லாத
தருணங்கள் தன்னி லன்னம்
பொசித்தலும் தரித்தி ரர்க்குக்
கிரணங்க ளொத்த மின்னாள்
கோட்டியுங்[1] கிளரு[2] மூப்பில்
பொருமந்த வேல்கண் ணாள்தன்
போகமும் விஷமாய்த் தோன்றும்! (75)

என்றது, பருவங்கள் தப்பின காலங்களிலே வித்தை யப்பியாசம் பண்ணுகுறதும், அசீரணத்தின் பேரிலே போசனம் பண்ணுகுறவனும், தரித்திரவானுக்கு ஸ்ரீகோஷ்டியும், விருத்தாப்பியவானுக்கு வாலை கோஷ்டியும், இந்த நாலுகாரியமும் நஷ்டமாயிற் றென்றவாறு.

துரியோதன னெடுத்த வம்புந்
துரோணமுந் துலங்கா தென்று
பரிவொடு பூண்ட தேரு
மற்றெனு மேழக்கு[3] ரோணித்

1. கொட்டியுங் என்றுளது.
2. கிளறு என்றுளது.
3. மேழேக்கு என்றுளது.

தெரிவாளன் சொன்ன தெய்வத்
திறனன்றிக் கொல்லா தாப்போல்
உருவமாம் பாத்தி ரன்கைக்
குதவுதா னமும்ந சிக்கும்! (76)

என்றது, திருயோதின னெடுத்த வில்லுந் தொடுத்த அம்புந் தொடுத்தபடியே நின்றது. ஏறினதேரும் பூண்ட புரவியும் பூண்டபடியே நின்றது. பதினெக்குரோணி சேனையும் மடிந்தது. அது எதுனாலே யென்றால் தெய்வ சகாயமில்லாமல். அப்படிப் போல அபாத்ரர்[1] கையிலே கொடுக்குற சொர்ணதானமும் அப்படி உதவியில்லாமல் போகுமென்றவாறு.

எடுத்திடில் விசய னம்பு
ஏகமாய்த் தொடுத்து வொன்றைத்
தொடுத்திடில் பத்து மாகில்
விடுக்கிலோர் நூறு மாகி
அடுத்ததை விட்ட வாறே
ஆயிர மாகி லெக்கில்
பிடித்திடிற் கோடி யாம்போல்
மறைவல்லோர்க் கீயும் தானம்! (77)

என்றது, அர்ச்சுனன் அம்பு எடுக்கும்போது ஒன்று, தொடுக்கும்போது பத்து, விடும்போது நூறு, படும்போது ஆயிரம், உள்ளே தைத்துப் பாயுறபோது கோடியாம் அப்படிப் போல, உத்தமனானவன் கையிற் கொடுக்குற சொர்ண தானமானது அப்படி வர்த்திக்கு மென்றவாறு.

சிதறிடு நெல்லை வாரு
கோலது திரட்டி யுண்போர்க்
குதவிடு மதுபோ லூற்ற
வாருகோ லுருளச் சேர்த்து

---

1. அபத்திர என்றுளது.

இதமுடன் பொசிப்போர்க் கீவன்
தானு(று)ந் தனமுங் கொடுப்பன்
விதறணன் பொசிப்ப னின்ன
மேன்மையும் பெறுவ னென்னே! (78)

என்றது, சிந்தின நெல்லை, வாருகோலானது, உருச் சேர்த்துப் பொசிக்கிறவனுக்குக் கொடுக்கும். அப்படிப் போல, அபத்தனாயிருக்கிற வாருகோலானது (உருளச் சேர்ப்பது போல) விதரணனாயிருக்கிறவன் (சேர்த்து) தானும் பொசித்து, யாவருக்குங் கொடுத்து, மேன்மையும் பெறுவானென்றவாறு.

சற்சனர் பொருளு நல்ல
சற்சனர்க் காகும் போலத்
துற்சனர் பொருளை யீனத்
துற்சனர் கொள்வார் போல
நத்திடு மாப்ப ழுத்தால்
கிளிகள்கோ கிலம்பொ சிக்கும்
கற்புறு வேம்பு காய்த்தால்
காக்கைகள் பொசிக்குந் தானே! (79

என்றது, உத்தமனாயிருக்குறவன் தேடின திரவியம் உத்தமரே பொசிப்பார்கள். துற்சனனாயிருக்குறவன் தேடின திரவியம், துற்சனரே பொசிப்பார்கள். அதென்போல வென்னில், மா பழுத்தால், கிளிகளும், குயில்களும் பொசிக்கும், வேம்பு பழுத்தால் காக்கைகள் பொசிக்குமாப்போ லென்றவாறு.

கண்ணுரு கற்பூ ரத்தால்
புனுகுகஸ் தூரி யாலே
பண்ணிய சேறு செய்து
உள்ளியைப் பதித்துப் பன்னீர்

தண்ணீரால் பயிர்செய் தாலுந்
தன்னாற்றம் போகா தப்பால்
நன்னியெத் தனைசெய் தாலுந்
துற்சனன் நலத்த னாகான்! (80)

என்றது, நல்ல கற்பூர குங்குமம் கஸ்தூரியாலே சேறு செய்து, நடுவே உள்ளி[1]யைப் பதித்துப் பன்னீர் வார்த்துப் பயிர் செய்தாலும், உள்ளியானது தன்னாற்றம் போகாது போல, துற்சனனானவனுக்கு எத்தனை யிதஞ் சொன்னாலும் நல்ல சற்குணம் வாரா தென்றவாறு.

குருவினைத் துதிக்கு முன்னே
கூடிய சபையில் தண்ணி[2]
யருளுவோன் தோழன் தன்னைத்
துதித்திடப் வடியார் தன்னைப்
பரவிய கரும முற்றி
முடிந்தபின் துதிக்கப் பாரி
உருமடிந் திடில்து திக்கத்தம்
மகவினைத் துதிக்கொ ணாதே! (81)

என்றது, குருவைச் சன்னிதியிலே துதிக்கச் சபையிலே நண்ணி செய்தவனையும், தோழனையுந் துதிக்க, அடியாளைக் காரிய முடிந்தவாறே துதிக்க. ஸ்ரீயானவளை மடிந்தவாறே துதிக்க. தன் பிள்ளையை ஒருக்காலுந் துதிக்கலாகா தென்றவாறு.

தாவு பட்சியில் சண்டாளி
சாத்திய காக்கை நாற்கால்
மேவிடு மிருகந் தன்னில்
மிகுத்திடுங கழுதை யாகும்

---

1. வெள்ளைப்பூண்டு. 2. நன்றி.

ஆவது கருமம் யோகி
அவரிற்சண் டாளி கோபி
பூவில்வாழ் மாந்தர் தன்னில்
பொருந்துதூ ஷகன்சண் டாளி ! (82)

என்றது, பறக்கிற பட்சியிலே காக்கை சண்டாளி. நாற்கால் மிருகத்திலே கழுதை சண்டாளி, யோகீஷ்வரரிலே கோபி சண்டாளி. மனுஷரிலே சருவ சண்டாளி தூஷகனென்றவாறு.

ஆறெனுஞ் சவையி லாத்தி[1]
லமர்ந்திருந் தாலும் ரூபம்
கூறரி தான மின்னாள்
அகத்திடை யிருக்கத் தானும்
மாறிலாச் செல்வத் தாலும்
வழங்கவு மிவைகள் மூன்றும்
பேறு(தா) னனுப விக்க
உத்தம(ம்) பேச வேண்டில் ! (83)

என்றது, அறுசுவைகளுடனே கூடின பதார்த்தமும் தன் கிருகத்திலே[2] அஷ்டயிசுவரியமும் இருந்தாலும் அதைத் தான் பொசிக்கிறதும், அதிர்ஷ்டம் வருகிறதும், ஐசுவரியமுண்டாகிறதும், தானங் கொடுக்கிறதும், பூருவ சென்மான்திரத்திலே, அவரவர் செய்த பூசாபலமல்லாமல், மத்தப்படி அனுபவிக்க வாராதென்றவாறு.

பருதி மதிபங் கலந்திடுநாள்
பாற்போ சனங்கள் தான்பொசித்தால்
கருமந் திங்களிற் செய்ததெல்லாம்
அன்னந் தந்தோற் காகுமென்றே

---

1. ஆத்தில்-அகத்தில், வீட்டில்

2. வீட்டிலே.

ஒருகோத் திரம்விட் டொருதிதியி
லுண்டால் தான்பின் னுகத்துசெய்யும்
பருகுந் திதியில் தனக்குள்ள
பிதிர்கள் வந்தோ ரெனப்பேசும்! (84)

என்றது, அமாவாசை நாள் பிறருடைய கிருகத்திலே தான் போசனம் பண்ணினாகில், அன்னங்கொடுத்தவனுக்காகும். தன்னுடைய மனையிலே சாப்பிட்டால் மெத்த விசேஷ மென்றவாறு.

மூர்க்கற்கு வளவு மென்று
முயன்றிடுங் கிராம ணிக்கு
மாக்கினற் கிராம மல்லால்
புறஞ்சொல்லா மன்னன் றானும்
காக்கின்ற புவிக்கு மென்னைக்
கற்றவர் தேச மெங்கும்
பார்க்கின்ற விடங்க ளெல்லாம்
பூச்சிய னாவ னென்றே! (85)

என்றது, மூர்க்கனானவனுக்கு, அவன் வளவு1 மட்டுஞ் செல்லும். கிராமணிக்கு அவன் கிராமமட்டுஞ் செல்லும். வித்துவானுக்கு, எந்தத் தேசத்திலே சென்றாலுஞ் செல்லும், ராசாவானவனுக்கு, அவன் தேசம் மட்டுஞ் செல்லும். லெட்சுமி கிடாட்ச முண்டாகு மென்றவாறு.

சிறுவருந் தியுந் தானுந்
தெரிவையர் வேந்தர் மாதர்
பொருளிது வேணு மென்று
பொருந்துவர் கேட்கும் நாளில்
உறுபொரு ளில்லை யுண்டு
என்பது முணரார் தங்கள்
பெறுவதே கரும மாகப்
பேசுவார் விடாமல் தானே! (86)

1. வீடு.

என்றது, சிறுபிள்ளைகளும், ஸ்ரீசனங்களும், ராசாவும் ஆகிய வர்கள் ஏதாகிலும் தங்களுக்கு வேண்டிய பொருள் கேட்குமிடத்தில், உண்டென்கிறது மில்லை யென்கிறதும் அறியாதவர்கள் தாங்கள் கேட்ட பொருள் விடாமல் கேட்பார்க ளென்றவாறு.

துற்சனர் முகங்கள் தானும்
துலங்கிய கமலம் போல
சற்சந னென்ற வார்த்தை
சந்தனக் குளுமை போலும்
முற்றிடு மிருகை தானும்
முரைந்திடும் வயிரம் போல
முற்றிடும் வயிரம் போலும்
மூர்க்கர்தன் குணங்கள் தானே! (87)

என்றது, துற்சன னானவன் முகம் எப்படியென்றால் தாமரைக் கமலம் போலவும், வசனமானது சந்தனக் குளுமை போலவும், இருதயமானது, அக்கினிக்கொழுந்து போலவும், இப்படிக்கொத்த லக்ஷண முண்டாயிருக்கும் பொல்லாத் துற்சனர்க் கென்றவாறு.

தன்மாதா குருவின் தேவி
தனக்குமுன் னானேன் தேவி
மன்தேவி தேவி மாதர்
மாமியர்க ளைந்து பேரும்
பன்னூலின் படியா ராய்ந்து
பாங்குட னிவர்க ளைந்துங்
நன்மாதா சமான மென்று
நல்லறி வாளர் கொள்வார்! (88)

என்றது, தன் மாதா, குருவின் தேவி, தனக்கு மூத்தோர் தேவி, ராசாவின் தேவி, தன் மாமியார் இவர்களைந்து பேரும். மாதாவுக்குச் சமானமென்று நல்லோர்கள் அறிந்து கொள்வார்க ளென்றவாறு.

தன்னையே யீன்றோன் வித்தை
சாற்றினோ னுபதே சங்கள்
பன்னியே வந்தெ ரிக்கப்
பயந்தவிர்த் திடுவோன் பஞ்ச
முன்னிலே வந்த நாளில்
முயன்றுகாப் பவனோ டைந்து
நன்னிடும்[1] பிதாவோ டைந்தாம்
நல்லறி வாளர் கொள்வார்! (89)

என்றது, தன்னுடைய பிதாவும், தன்னைப் படிப்பித்தவனும், உபதேசம் பண்ணினவனும், பயந்தீர்த்தவனும், பஞ்சகாலத்தில் அன்னங்கொடுத்தவனும், இவர்களைந்து பேரும் தன் பிதாவுக்குச் சமானமென்று, நல்லறிவாளர்கள் கொள்ளுவார்களென்றவாறு.

தளிகையில் தயிலம் விட்டுத்
தானெறிந் திடுந்தீ பத்தில்
எளிதென நூறு தீப
மேத்தினா லதற்குத் தாழ்வோ
நளினமின் னுள்ள மட்டும்
சிலவினால் நாச மாமோ
தெளிதரு வைத்தா லெண்ணெய்
ஏத்திடா தீப மாமே! (90)

என்றது, யாதாமொருவனுக்கு லெட்சுமி கடாக்ஷமுள்ளளவும், எத்தனை சிலவழிந்தாலும், ஆயுசு பரியந்தமுங் குறைபடாது. லெட்சுமி கடாக்ஷந் தப்பினால் எண்ணெயில்லாத தீபம்போல ஆகும் என்றவாறு.

அழுக்குப்பல் லழுக்குத் தூசி
அதிகபோ சனந்தா னென்றும்
ஒழுக்கறு நெஷ்டூ ரங்கள்
உரைப்பவ னுதைய காலம்

---

1. *நண்ணிடும்.*

புழுக்குத்த சாயங் காலம்
துயில்பவன் தன்னைப் பார்த்து
இழுக்குறு மலர்கள் போல
வாகிலு மிருள்தா னென்றே ! (91)

என்றது, அழுக்கு, அழுக்குப் புடவை (உடுத்துகிறவளும்) அதிக போசனம் பண்ணுகுறவனும், எந்நேரமும் நெஷ்டூரவார்த்தை சொல்லுகுறவனும், உதயகாலம் சாயங்காலம் நித்திரை பண்ணுகுறவனும் (ஆகிய) இவர்களைக் கண்டால் லெட்சுமி விலகிப் போவாளென்றவாறு.

அத்திக்காய் கோவை தேத்தான்
ஐவரலிக் காயும்[1] வெள்ளை
கத்தரி சோத்துக் காந்தல்[2]
கண்டியை யாறு வகையும்[3]
நத்தியே யுண்ப வர்க்கு
நாயகன் றாளின் மீது
பத்தியே வாரா தென்று
நாடொறும் பகருங் காலே ! (92)

என்றது, அத்திக்காய், கோவைக்காய், தேத்தான்காய், அய்வரலிக்காய், வெள்ளைக்கத்தரிக்காய், சேர்த்துக் காந்தல், இந்த ஆறுவகையுஞ் சாப்பிட்டவனுக்குச் சிவன் பேரிலே அன்பிராதென்றவாறு.

பாக்குவெற் றிலையுங் கெந்தம்
பரிமன சுகந்த வாசம்
தேக்குமாப் பலாவு மெல்லாஞ்[4]
சிறந்தொரு கரத்தால் வாங்கி

1. ஐவேலிக்காய் போலும். 2. சோற்றுக் கற்றாழையோ?
3. மாருவேனும் என்றுளது. 4. பிலாவு என்றுளது.

தூக்கியீந் திட்டார்க் கென்றும்
துலங்கிய சீர்நா டோறும்
தாக்கிய சிரேக[1] முண்டாய்த்
தானும்வாழ்ந் திருக்கு மென்றே ! (93)

என்றது, பாக்கு, வெற்றிலை, பரிமள சுகந்தம் புஷ்பம்[2] ஆபரணம் இவைகளை யாதாமொருவன் கொடுத்தாலும், வாங்குகிறவன், ஒரு கரத்தினாலே வாங்கினானாகில், கொடுத்தவனுக்கு அதிக லெட்சுமி கடாக்ஷம் மென்மேலும் உண்டாகுமென்றவாறு.

தருமநெறி நீதிகள் முற்றும்.

குறிப்பு: இந்நூலின் முதற்பதிப்பிற்கு ஆதாரமாக சுவடியில் விடுபட்டிருக்கின்றவையான (21,22, 71, 72) நான்கு செய்யுட்கள் மிகப் பழமையான பதிப்பு நூலின் துணைகொண்டு இப்பதிப்பில் நிரப்பப்பெற்றுள்ளன.

---

1. சிரேயஸ்-மிகு செல்வம். 2. பொஷ்பம் என்றுளது.